# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

**பேச்சுப்போட்டி 2020** **ஐந்தாம் வகுப்பு**

அனைவருக்கும் வணக்கம்

## திருவள்ளுவர்

தமிழ்த் தடாகத்தில் பூத்துக் குலுங்கும் அறமலர்களுள் திருக்குறள் என்றும் வாடா நறுமலர். உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உள்ள ஒரு நூல் திருக்குறள். அளவிற் சிறியதாய், ஆழத்தில் பெரியதாய் இருக்கும் அனுபவக் கடல் திருக்குறள். அத் திருக்குறளை இவ்வுலகிற்களித்த மேதைதான் வள்ளுவப் பெருந்தகை.

திருக்குறளில் கூறப்படும் கருத்துக்கள் உலகத்து மக்கள் அனைவருக்கும் பொருந்துவன. இதனாலேயே கற்றறிந்தோர் திருக்குறளை உலகப் பொதுநூல் என்று கூறுவர். இதனையே

"வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று கூறிப் பெருமைப் படுகின்றான் பாரதி.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பிரிவாக அமைந்தது திருக்குறள். மனித வாழ்க்கைக்கு அடிப்படையானவற்றை வள்ளுவர் தன் குறட்பாக்களில் இனிய தமிழில் மிகவும் அழகாகக் கூறியிருக்கின்றார்.

வாழ்க்கையில் நல்வழியில் அமைக்க, நல்லது எது, அல்லது எது, அறிய, வேண்டியது எது, வேண்டாதது எது என்று பகுத்தறிய மனிதனுக்கு உறுதுணையாக இருப்பது அறிவு. அவ் அறிவின் தேவையை உணர்த்த விரும்பிய வள்ளுவர் என்ன சொல்கின்றார்?

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என இரத்தினச் சுருக்கமாக வள்ளுவர் கூறிவிட்டார்.

நன்றி
வணக்கம்